பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை 13.12.2024 கதிர் 036

## சபாநாயகரின் கல்வித் தகைமை; ஜனாதிபதி அமைதி காப்பது ஏன்?

### பொது ஜன பெரமுன எம்.பி. கேள்வி

சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க சபாநாயகரின் கல்வித் தகைமை தொடர்பான சர்ச்சையில் அமைதிகாப்பது ஏன் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர் மனோஜ் கமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு முழுமையாகக் குறைக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாத எண்ணக்கரு பகிரங்கமாக வெளிப்படுகின்ற நிலையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலின்போதும் மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது. இவ்விடயம் குறித்து கேள்வியெழுப்பியபோது முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு எவ்விதத்திலும் குறைக்கப்படவில்லை என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்தது. அத்தியாவசிய உணவு பொருட்கள் தட்டுப்பாடு தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்தியுள்ள பின்னணியில் மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தரப்பில் இருந்து 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நீக்கப்பட்டுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும்.

சபாநாயகர் அசோக்க ரன்வலவின் இல்லாத கலாநிதி பட்டம் ☞2

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் 2 சகோதரிகள் இறப்பு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பின்னதுவ மற்றும் இமதுவ நுழைவாயில்களுக்கு இடையில் நேற்று நடந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் உயிரிழந்தனர். கார் ஒன்று லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பின்னதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை நுபே பகுதியைச் சேர்ந்த சதீஷா (12) மற்றும் அவரது ஒரே சகோதரி செனுதி தம்சரா (10) ஆகிய இருவருமே விபத்தில் உயிரிழந்தனர். விபத்தில் உயிரிழந்த சிறுமிகளின் தாயும் தந்தையும் காயங்களுடன் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ☞8

## கோட்டா பாகம் இரண்டா ஜனாதிபதி அநுரகுமார?

### ஹர்ஷன எம்.பி. கேள்வி

சபாநாயகர் மீது மாத்திரமின்றி மேலும் சில அமைச்சர்களது பட்டங்கள் தொடர்பிலும் தற்போது கேள்வி எழுப்பப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போன்று பொம்மைப் பட்டதாரி அமைச்சர்களாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பில் உள்ளனர்? மக்களின் பெரும் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவால் வடக்கு கிழக்கு உட்பட இலங்கை முழுவதும் 361 'பார் லைசென்ஸ்' எனப்படும் மதுக்கடை அனுமதிகள் தொடர்பாக பொதுத் தேர்தல் காலத்தில் தமிழ் அரசியல் பரப்பில் ஒரு பெரும் சர்ச்சைவெடித்துக்கிளம்பியது. தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் பலரும் இந்த அனுமதிகளைப் பெற்றுக் கோடிகளில் பணம் பார்த்தனர் என்பதே சர்ச்சைவெடிக்கக் காரணம். அப்படி ஒரு மதுக்கடை அனுமதி வழங்கப்படுவதற்குத் தான் பரிந்துரை வழங்கினார் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் மட்டும் ஒப்புக்கொண்டிருந்தார். வேறு எவரும் ஒப்புக்கொள்ளவில்லை.

361 'பார் லைசென்ஸ்'கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை ஒப்புக்கொண்டு அவை யார் யாருக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்திய ஆளும் தரப்பும் அவை எந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் கீழ் வழங்கப்பட்டன என்பதை இன்னும் வெளியிடவில்லை. தேர்தல் காலத்தில் இந்த 'பார் லைசென்ஸ்'கள் எல்லாமே ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்ட அரசியல் லஞ்சம் என்று குற்றஞ்சாட்டிய அரசுத் தலைவர் அநுரகுமாரவும் ஆளும் தரப்பினரும் அந்த லஞ்சத்தைப் பெற்றவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தத் தயங்கி வருகின்றது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

இதற்கிடையில் அரசியல் ☞2

# மேலும் பலருக்கும் எலிக் காய்ச்சல்

## நேற்று மட்டும் பருத்தித்துறையில் 14 பேர் மருத்துவமனையில் சேர்ப்பு

வடக்கில் திடீரெனப் பரவி உயிரிழப்புக்களையும் ஏற்படுத்திவரும் இந்தக் காய்ச்சல் தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பு சுகாதார அமைச்சிலிருந்து வருகை தந்திருந்த குழுவினர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுப் பிற்பகல் நேரில் சென்று ஆய்வு நடத்தினர். அங்குள்ள நோயாளர்களையும் பார்வையிட்டனர். இந்தக் குழுவினர் இன்று வெள்ளிக் கிழமை நோய்த் தொற்று ஏற்பட்ட இடங்களுக்கும் களவிஜயம் மேற்கொண்டு ஆராயவுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் இருவருக்கு எலிக்காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், குறித்த நோய்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான தொடர்பில் ☞2

## எரிபொருளுக்கான தட்டுப்பாடு வராது

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் போதியளவு எண்ணெய் இருப்பு இருப்பதால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என அதன் தலைவர் ராஜகருணா தெரிவித்தார்.

2025 ஏப்ரல் மாதம் வரை பெற்றோல், டீசல் உள்ளிட்ட அனைத்து எரிபொருட்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்யும் வெளிநாட்டு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 30,000 மெற்றிக் தொன் எரிபொருளை ஏற்றிச் செல்லும் கப்பல் தொடர்பில் அரச திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

எண்ணெய்க் கப்பலைத் திருப்பியனுப்புவதால் நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும், நிறுவனத்தின் உள்ளகப் பிரச்சினை காரணமாகவே மீண்டும் எண்ணெய் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் ☞2

## வந்து சேர்ந்தது அரிசி

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டை சமாளிக்கும் விதத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்த அரிசி கொழும்புத் துறைமுகத்தில் வந்து இறங்கியுள்ளது.

டிசெம்பர் 10 முதல் நேற்று மாலை 5.30 மணி வரையில் 19 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களப் பேச்சாளர் சிவலி அருகொட தெரிவித்தார்.

சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கான தற்காலிக அனுமதியை டிசெம்பர் 4 ஆளும்தரப்பு வழங்கியது. இதையடுத்து இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அதில் முதல் தொகுதி அரிசிக் கப்பல் டிசெம்பர் 10 கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. நேற்று மாலைவரையில் 19 ஆயிரம் தொன் அரிசி கப்பலில் இருந்து இறக்கப்பட்டுள்ளது. அரிசி இருப்பு துறைமுகத்திலிருந்து விரைவாக அகற்றப்படுவதுடன், இலங்கை சுங்கத்தின் இடர் முகாமைத்துவம், மத்திய சரக்குகள் ஆய்வு, தடுப்பு மற்றும் பதிவுப் பிரிவுகள் விசேட வேலைத்திட்டத்தின் ஊடாக அரிசி இருப்பை மிக விரைவில் சந்தைக்கு வெளியிடுவதற்கான ஏற்பாடுகளும் ☞2

## தெரிவுக்குழு அமைத்து எம்.பிக்களின் கல்வித் தகுதியைப் பரிசோதியுங்கள்

### பிரேரணை கொண்டு வருகிறது ஐ.தே.க.

ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது கல்வித் தகுதியையும் பரிசோதிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியும் புதிய ஜனநாயக முன்னணியும் தீர்மானித்துள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர், கலாநிதி, பொறியிலாளர், மருத்துவர் என்கிற பட்டங்களைத் தமது கல்வித் தகமையாகப் பயன்படுத்தி வரும் நிலையில் அவை சரியான தரவுகள்தானா என்பதைப் பரிசோதிப்பதற்காகவே இந்தப் பிரேரணை கொண்டுவரப்படுவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

இது தொடர்பான பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுத்தலைவர் ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளார். ☞8

### நீதியரசரின் பதவி உயர்வை நிராகரித்த

## அரசமைப்புச் சபை முடிவை ஏற்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு

நீதியரசர் ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கும் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புச் சபையை நிராகரித்தமை சட்டரீதியானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற ☞2

## சபாநாயகர் ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### பொதுஜன பெரமுன அறிவிப்பு

சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர தீர்மானித்துள்ளதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

சபாநாயகர் தொடக்கத்திலேயே கலாநிதி பட்டம் மற்றும் பல்வேறு பட்டங்களைக் காட்டி மக்களை ஏமாற்றி விட்டார் என அவர் தெரிவித்துள்ளார். ☞2

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கண்டியில் ஒரு பெண் கைது

விவசாயம் செய்ய அரச காணி ஒன்றை பெற்றுத் தருவார் என்றுகூறி மூன்றரை லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கண்டியைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கடவத்தைபிரதேசத்தில்உள்ளநபர்ஒருவர் ஆணைக்குழுவிற்குவழங்கியமுறைப்பாட்டின் அடிப்படையில்சந்தேகநபர்கண்டிபோகம்பறை விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக உள்ள வாகனத் தரிப்பிடத்தில் வைத்துத் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கண்டி, தலாத்துஓயா பிரதேசத்தில் வசிக்கிறார். கண்டி, கிரிமெட்டியவத்த பிரதேசத்தில் விவசாயத்திற்காக அரச காணி ஒன்றை காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக பெற்றுத்தருவதற்கான இடைத்தரகராகச் செயற்பட்டே சந்தேகநபர் லஞ்சம் பெற்றார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கைது செய்யப்படும்போது மூன்றரை இலட்சம் ரூபா இலஞ்சம் பெறப்பட்டது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இனி இது .....

லஞ்சமாக வழங்கப்பட்ட சாராயக்கடை அனுமதிகளை ஆளும்தரப்பு மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பட்டு வருகின்றன. இந்த சாராயக்கடை அனுமதிகள் மூலம் பல மில்லியன் ரூபாய் அரசுக்கு வருமானமாகக் கிடைத்துள்ள நிலையில் அவற்றை திரும்பப் பெறுவது ஆளும்தரப்பால் சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரியதுதான். இருந்தாலும் வடக்கு கிழக்கில் வழங்கப்பட்ட சாராயக்கடை அனுமதிகளை உடனடியாகத் திரும்பப்பெறவேண்டும் என்ற கோரிக்கைகள் வலப்பெற்றுவருகின்றன. இதனைவலியுறுத்து போராட்டங்களுக்கும்ஏற்பாடுகள்நடக்கின்றன.

இது புதிய பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கின்றது. ஒருவேளை இந்த சாராயக்கடை அனுமதிகளை அரசு மீளப் பெற்றால் ஒருவழியாக அரசுக்குக் கட்டிய பணத்தைக்கூட மீட்டுவிடலாம், ஆனால் அதற்கான பரிந்துரையை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்த கோடிக்கணக்கான பணத்தை எப்படித் திரும்பப் பெறுவது என்பதே சாராயக்கடைகளை எடுத்த முதலாளிகளின் பெரும் கவலையாக மாறி இருக்கின்றது. இந்த அனுமதிக்காக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 2 முதல் 5 கோடிகள் வரை வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை எப்படித் திரும்பப்பெறுவது என்பதே முதலாளிகளின் பிரச்சினையாக மாறியிருக்கிறது.

இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல அவர்களின் அளக்கைகளாகக் கட்சியில் உயர் பதவிகளை வைத்திருக்கக்கூடியவர்களும் இதே சாராயக்கடை அனுமதிகளைப் பெற்றுத் தருவார்கள் என்று தரகர்களாகப் பணியாற்றி கோடிக் கணக்கில் பணத்தைச் சுருட்டிவிட்டார்கள் என்கிற தகவல்கள் இப்போது வரத் தொடங்கியுள்ளன. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற வேட்பாளர் ஒருவர் இப்படி சாராயக்கடை அனுமதியைப் பெற்றுவிட்டுதரகுப்பணத்தைஏமாற்றிவிட்டார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றது.

குற்றஞ்சாட்டப்படுபவர் ஏற்கனவே கொழும்பில் ஒரு வீட்டை ஆட்டையைப் போட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை எதிர்கொண்டு வருபவர். கட்சித் தலைவர் ஒருவருக்கு நெருக்கமானவர். கிளிநொச்சியில் சாராயக்கடை ஒன்றுக்கான அனுமதியை இவர் தரகராக இருந்து பெற்றுக்கொடுத்துள்ளார். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரையும் மற்றொரு தரகராகச் சேர்த்துக்கொண்டுதான் இந்த 'டீல்' நடந்திருக்கின்றது. இந்த அனுமதியைப் பெற்றுத்தருவதற்குதனக்குஒருசதம்பணமும் வேண்டாம் என்றும் பெரும்பான்மையினத் தரகருக்கு 5 கோடி ரூபாய் வரை பணம் தரலாம் என்றுகூறியுமே இந்த 'டீல்' முடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சாராயக்கடை முதலாளிக்கு 'லைசென்ஸ்' கிடைத்துவிட்டது. 'டீலை' முடித்துக்கொடுத்த பெரும்பான்மை இனத்தவர் தனது தரகுப் பணத்தை முதலாளியிடம் கேட்டபோது, அவர் கேட்ட தொகையிலும்பார்க்கக் கூடிய தொகை அந்தத் தமிழ் தரகருக்குத் தன்னால் எப்போதோ வழங்கப்பட்டுவிட்டது என்று முதலாளி கைவிரித்துவிட்டார். அதன் பிறகுதான் பெரும்பான்மை இனத் தரகருக்குத் தான் ஏமாற்றப்பட்டது தெரியவந்திருக்கிறது. இப்போது அந்தப் பணத்தைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டு அந்தச் சிங்களத் தரகர் கட்சிக்காரர்கள் ஒவ்வொருவராக மன்றாடி வருகின்றார்கள். இனியென்ன அந்தப் பணத்திற்கு நாமம்தான்.

.........................

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நாளை வவுனியாவில் கூடுகின்றது. தொடக்கமே பெரும் களேபரமாகத்தான் இருக்கும் என்று தெரிகிறது. கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மாவை சேனாதிராசா இந்தக் கூட்டத்தை நடத்த முடியுமா இல்லையா என்பதில் இருந்து குழப்பம் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சியின் அடிப்படை உறுப்பினர் என்பதைத் தவிர மற்றைய பதவிகள் எல்லாவற்றில் இருந்தும் தான் விலகுகிறார் என்று மாவை சேனாதிராசா கட்சியின் செயலாளருக்கு கடிதம் எழுதி, அதனை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறார் என்று செயலாளர் பதில் கடிதம் எழுதியதைத் தொடர்ந்தும் மத்திய குழுக் கூட்டத்திற்கு மாவையருக்கும் நிர்வாகச் செயலாளரால் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருப்பதே இந்தக் குழப்பத்திற்கு மூல காரணம்.

இருந்தாலும் அவர் அப்படி நடந்துகொண்டதற்கும் ஒரு காரணம் இருக்கின்றது. மாவையர் முதலில் தனது பதவி விலகல் கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு எ-ழுதிவிட்டு அதன் பிரதியைக் கட்சியின் செயலாளருக்கும் அனுப்பி வைத்திருந்தார். அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் வந்துவிட்டதால் கிடப்பில் கிடந்த கடிதத்தை ஏற்றுக்கொண்டு தான் நடவடிக்கை எடுக்கிறார் என்பதை தேர்தல் முடிந்ததும் செயலாளர் சத்தியலிங்கம் மாவையருக்கு அறிவித்திருந்தார்.

அந்தக் கடிதம் கிடைத்ததும், அது திகதியிடப்பட்டிருந்ததற்கு -முன்னரான ஒரு திகதியைக் குறிப்பிட்டு தனது பதவி விலகல் கடிதத்தைத் தான் திரும்பப் பெறுகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதன் பிரதியை பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வைத்திருக்கிறார். இந்த நிலையில் மாவையர் கட்சியின் தலைவரா இல்லையா என்ற சர்ச்சையிலேயே இன்றைய கூட்டம் தொடங்கும். அதற்கொரு முடிவு கட்டப்பட்ட பின்னர்தான் வழக்கமான கூட்டமே தொடங்கும். மாவையரை எதிர்ப்பதற்கு மத்திய குழுவில் பலர் இருக்கின்றனர். ஆதரிப்பதற்கும் சிலர் இருக்கின்றனர். அதனால் இது ஒரு கருத்து மோதலாக வெடிக்கும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். மாவையர் கூட்டத்திற்குச் செல்லவில்லை என்றால் இவை அனைத்தும் தவிர்க்கப்படலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மேலும் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடிநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவிவரும் ஒருவிதமான காய்ச்சல் காரணமாக இதுவரை 44 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் யாழ் போதனா வைத்தியசாலயிலும் 32 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதுவரை 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நோயாளர்களிடமிருந்து கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருவருக்கு எலிக்காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே தற்போது மேற்படி காய்ச்சலை எலிக்காய்ச்சலாக கருதி சிகிச்சைகளும் தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இக்காய்ச்சல் தற்போது பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலையை நாடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளில் இந்நோய்க்கு சிகிச்சை வழங்குவதற்கான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விடயம் சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரிகளால் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. மேலும் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் கிராமமட்ட உத்தியோகத்தர்கள் மூலமாக பொதுமக்களுக்கு இவ்விடயம் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

எலிக்காய்ச்சல் நோய் ஏற்படக்கூடிய ஆபத்தைக் கொண்டவர்களான விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு இந்நோய்க்கான தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் பிரதேசமட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் கிராமமட்டத்தில் விவசாயிகளுக்கு தடுப்பு மருந்துகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நோய்ப்பரம்பலை ஆய்வுசெய்து ஆலோசனை வழங்குவதற்காக மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்பு பிரிவிலிருந்து வைத்திய நிபுணர்கள் குழுவொன்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது. அவர்கள் வைத்தியசாலைகளிலும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் களத்திலும் ஆய்வுகளை மேற்கொண்டு உரிய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். மேலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான ஒருதொகுதி மருந்துகள் சுகாதார அமைச்சின் மருத்துவவழங்கல்பிரிவினால் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது - என்றார்.

## அரசமைப்புச் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை நீதியரசர் பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்குப் பரிந்துரைத்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய சிபாரிசை முன்னைய அரசமைப்பு சபை நிராகரித்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதியரசர்கள் பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்த்தன ஆகியோரை கொண்ட ஆயம் நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

நீதியரசர் பந்துல கருணாரத்ன மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருப்பதன் காரணமாக அவரை உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவியுயர்த்த முடியாது என்பதே அரசமைப்புச் சபையின் நிராகரிப்புக்கான காரணமாக இருந்தது. அந்த வாதத்தை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

மேற்படி உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புச் சபை நிராகரித்தமை தவறென உத்தரவிடக் கோரி வியாங்கொடையைச் சேர்ந்த மஹிபுத்திர பத்திரன என்பவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரித்து உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

அது மாத்திரமில்லாமல், வழக்குச் செலவாக அரசுக்கு ஐந்து இலட்சம் ரூபாவுடன் அரசமைப்புக் கவுன்ஸிலின் மூன்று சிவில் பிரதிநிதிகளுக்கும் தலா 5 இலட்சம் ரூபாவும் என்ற அடிப்படையில் மொத்தம் 20 இலட்சம் ரூபாவை செலுத்தும்படியும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

இந்தவழக்கில் அரசமைப்புக்கவுன்ஸிலின் பிரதிநிதிகளான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோருக்குச் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், அரசமைப்பு கவுன்ஸிலின் மூன்று சிவில் பிரதிநிதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக.ஈஸ்வரனும் முன்னிலையாகி பிரதான வாதங்களைச் சமர்ப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சபாநாயகர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தனது நாடாளுமன்றக் குழுவின் ஊடாகச் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், இதற்கு முழு எதிர்க்கட்சியினரும், ஆளும்தரப்பின் மனசாட்சியுள்ள உறுப்பினர்களும் பங்களிப்பார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகரின் கல்வித் தகுதி மோசடியாகத் தெரிவிக்கப்பட்டு அது தவறு என்று தெரியவந்தால், சபாநாயகர் அரசமைப்புச் சட்டத்தையும், நாட்டின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் மதித்து உடனடியாக இந்தப் பதவியிலிருந்து விலகவேண்டும்" என்றார் அவர்.

## எரிபொருளுக்கான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் தெரிவித்தார்.

அந்தக் கப்பலில் பதினைந்தாயிரம் மெட்ரிக் தொன் பெற்றோல் மற்றும் ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தெல் நவ ஹரவய யாவ் நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையங்களுக்கு சிலோன் பெற்றோலியம் நிறுவனம் எரிபொருளை வழங்கவுள்ளதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் தொடர்ச்சியான எண்ணெய் விநியோகத்திற்கு கனிடா எண்ணெய் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்பதாகவும், எவ்வித செல்வாக்குமின்றி தொடர்ந்து எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ளப்படும் எனவும் ராஜகருணா தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் கப்பல் ஒன்றைத் திருப்பியனுப்பியதாகவும், இதனால் எதிர்காலத்தில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை எனவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## சபாநாயகரின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. கலாநிதி பட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினர் கேள்வியெழுப்பியுள்ள பின்னணியில் சபாநாயகர் அமைதியாக உள்ளார். கலாநிதி பட்டம் இருக்குமாயின் அதனைப் பகிரங்கப்படுத்தலாமே!

சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். பாரம்பரியமான அரசியல்வாதிகள் மோசடியாளர்கள். ஆகவே நாடாளுமன்றத்தை தூய்மைப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார். அதை நம்பி மக்களும் அவர்களுக்குப் பெரும்பான்மைப் பலத்தை வழங்கினார்கள். ஆனால் இந்த ஆளும்தரப்பு பெரும்பான்மை பலத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துகிறது.

சபாநாயகர் அசோக்க ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பான சர்ச்சையில் ஜனாதிபதி அமைதி காப்பது ஏன்? சபாநாயகர் பதவி விலகவேண்டும் அல்லது கலாநிதிப் பட்டத்தை பகிரங்கப்படுத்தவேண்டும். மின்சார சபை தொழிற்சங்க தலைவராகப் பதவி வகித்த அசோக்க ரன்வலவின் கல்வித் தகைமையை மக்கள் கோரவில்லை. நாட்டின் 3ஆவது குடிமகனான சபாநாயகரின் கல்வித் தகைமையே தற்போது சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, சபாநாயகர் பதவிக்கான கௌரவம் மலினப்படுத்தப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு உண்மைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என்றார்.

## வந்து....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு வருகின்றன என்று சிவலி அருகொட தெரிவித்தார்.

## கோட்டா...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையைப் பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் நாட்டுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு ஜே.வி.பி.க்கு உண்டு. ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க கோட்டாபயவின் இரண்டாம் பாகம் என்ற நிலையை அடைகிறாரா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் வியாழக்கிழமை (12) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறல் இந்திய உயர்ஸ்தானிகர் கவனத்திற்கு

## ரவிகரன் கொண்டுவந்தார்

கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகருக்கும், இலங்கைத்தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே இடம் பெற்றசந்திப்பின்போதுஇந்தியஇழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் குறித்துதம்மால், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதாக வன்னிமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

அதேவேளை இந்திய உயர்ஸ்தானிகர் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்துவதாகத் தெரிவித்ததுடன், ஜனவரியில் முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொள்வதாகத் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக மீனவதின நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த நவம்பர்மாதம் 21ஆம் திகதி இலங்கைத்தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயம்தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு இந்தச் சந்திப்பில் இந்திய இழுவைப்படகுகள் எமது கடல் பகுதிகளுக்குள் அத்துமீறி வருகைதந்து, எமதுமீனவமக்களின்வாழ்வாதாரங்களைச் சூறையாடிச் செல்கின்ற விடயத்தையும் முன்வைத்திருந்தேன்.

நாம் கரையில் இருந்து பார்க்கும்போது தெரியக்கூடிய அளவில் வெளிச்சமிட்டவாறு இந்திய இழுவைப் படகுகள் செய்கின்ற அட்டகாசமான செயற்பாடுகளைப் பற்றி அவரிடம் மிக அழுத்தமாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்தவகையில் இந்திய மீனவர்களால் எமதுமீனவர்களுக்குஏற்படும்இழப்புக்கள் தொடர்பில் அவரிடம் மிக விரிவாக எடுத்துக்கூறியிருந்தேன்.

இவ்வாறு அவரிடம் இந்த விடயத்தை முன்வைத்து நான் பேசும்போது ஏனைய தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாகப் பேசியிருந்தனர்.

இதன்போதுஉயர்ஸ்தானிகர்சந்தோஷ் ஜா இதற்குப் பதிலளிக்கும்போது -

இந்த இழுவைப் படகுகள் அத்துமீறி நுழையும் விடயத்தில் கவனம் செலுத்துவதாகவும்,எதிர்வரும்ஜனவரியில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் தாம் வருகைதரவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக இந்த விடயங்களில் நாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்திக் கொண்டேயிருக்கின்றோம்.

இதுமாத்திரமின்றி நாடாளுமன்றத்தில் பேசக்கிடைக்கின்ற நேரங்களிலும் இந்த விடயம் தொடர்பில் பேசுவோம்.

இந்திய இழுவைப்படகுகள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைச்



சூறையாடுவதற்குஎதிராகஇதற்குமுன்னர் எவ்வாறு குரல்கொடுத்துவந்தோமோ அதேபோல்தொடர்ந்தும்இந்தவிடயத்தில் குரல்கொடுப்போம்.

அதேபோல்தென்னிலங்கைமீனவர்களின் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் தொடர்ந்தும் நாம் குரல்கொடுப்போம்.

இந்த விடயங்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடனும் பேசியிருக்கின்றேன்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம்செலுத்துவதாக கடற்றொழில் அமைச்சரும் உறுதியளித்திருக்கின்றார்.

அதேவேளை இந்த காற்றாலைத் திட்டம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த நாள்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது மன்னாருக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள்தொடர்பில்ஆராயும்போது, அங்குள்ள மக்கள் கூடுதலாக இந்த காற்றாலைத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் தெரிவித்திருந்தனர். அந்தவிடயம் தொடர்பிலும் பேசியுள்ளோம். காற்றாலைத் திட்டத்தால் மன்னாரில் உள்ள பாதிப்பு நிலைமைகள் குறித்தும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அத்தோடு யாழ்ப்பாணத்திற்கும் இந்த காற்றாலைத் திட்டத்தைக் கொண்டுவரப்போவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்ப்பாணம் காற்றாலை தொடர்பானவிடயங்களையும், மன்னார் காற்றாலை தொடர்பான விடயங்களையும் உரியவர்கள் விரிவாக எம்மிடம் கையளியுங்கள்.

இதேவேளை மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினையும் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்த காலத்தில், கொக்கிளாயில் கனியமணல் அகழ்விற்கென மக்களின் காணிகள் சுமார் 44ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதன்பிற்பாடு கனியமணல் அகழ்விற்காக அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் எமது போராட்டங்களால் கைவிடப்பட்டிருக்கின்றன.

மேலும்சட்டவிரோதகடற்றொழில்கள் எனஅரசால்அறிவிக்கப்பட்டகடற்றொழில் செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாகத் தடைசெய்து, எமது மீனவர்களின் முறையான கடற்றொழில் செயற்பாடுகளுக்கு உதவவேண்டும். இந்திய இழுவைப்படகுகளால் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும். இந்த விடயங்களுக்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடும்போம் - என்றார்.

# யாழில் 213 கிலோ நிறையுடைய கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

யாழில்213கிலோஎடையுடைய கேரளக் கஞ்சாவுடன் மீசாலை பகுதியைச் சேர்ந்த இவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

51 ஆவது படைப்பிரிவு இராணுவமுகாமைச் சேர்ந்த புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக, காரைநகர் பகுதியில் வைத்து சாவகச்சேரி - மீசாலை பகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேகநபர்கள் பெருமளவான கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின் போது 213 கிலோ 800 கிராம் எடையுடைய கேரள கஞ்சா மற்றும் ஒரு படகு என்பனகைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சான்றுப் பொருள்களுடன்ஊர்காவல்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாற்றுத் திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலம்

## வவுனியாவில் நடந்தது

இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான சர்வதேச தினமானநேற்று(வியாழக்கிழமை) மாற்றுத்திறனாளிகளால் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் உள்வாங்கல் மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக இயலாமையுடையவர்களின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல் எனும் தொனிப்பொருளில் வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாகஆரம்பமானஊர்வலம் வைத்தியசாலைசுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை அடைந்தது.

ஊர்வலத்தில்ஈடுபட்டவர்கள் நம்பிக்கை மனதில் உண்டு நம்பிக்கை கொடுங்கள்', 'தொழில் உரிமை அனைவருக்கும் உண்டு', 'திறமைக்கு இயலாமைதடைகள் அல்ல' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

குறித்த நிகழ்வு வவுனியா மாவட்டசெயலகம் மற்றும் ஒஹான் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)







காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்

சபாநாயகரின் கல்வித்தகைமை குறித்த சர்ச்சைகள் இவ்வளவு தூரம் பாரதூரமானதற்குப் பின்னரும் நாடாளுமன்றத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்றவர்களே அதனை பொய்மைகளின் கூடாரமாக்கி விட்டார்கள் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்ற நிலை வந்த பின்னரும் ஆளும் தரப்பினர் இந்த விடயத்தில் தொடர்ந்து அமைதி காப்பது முறையல்ல.

தனது கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சபாநாயகர் வெளியிடவேண்டும் அல்லது இது தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தி ஆளும்தரப்பு அறிக்கை ஒன்றை விடுக்கவேண்டும். நாடாளுமன்ற சபாநாயகர் என்பவர் ஒ–ரு நாட்டின் மிக உயர்ந்த தலைவர்களில் ஒருவராகவும் அரசுத் தலைவரும்கூட மரியாதை செலுத்தும் இடத்திலிருக்கும் தலைவராகவும் இருக்கும் நிலையில் அவரது கல்வித் தகைமை குறித்து எதிர்க் கட்சிகள் ஆதாரத்துடன் எழுப்புவதாகக் கூறிக்கொள்ளும் கேள்விகளை, பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்தவர்களின் காட்டுக் கூச்சல் என்று ஒதுக்கிவிட்டுப் போய்விட முடியாது.

சபாநாயகரின் கல்வித் தகைமை குறித்து மட்டுமல்ல மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகுதி தொடர்பாகவும் சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன. இதனால் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகுதிகளைப் பரிசீலித்துச் சரிபார்ப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பிரேரணை முன்வைக்குமளவிற்கு எதிர்க் கட்சிகள் நகர்ந்தி–ருக்கும் நிலையிலும் ஆளும் தரப்பு அமைதி காப்பது எங்கோ தவறு நிகழ்ந்துள்ளது என்கிற சந்தேகத்தை எழுப்புவதாக உள்ளது.

சபாநாயகர் ஜப்பானிய வசேடா பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார் என்று கூறப்பட்டபோதும் அசோக சப்புமல் ரன்வல என்ற பெயரில் அந்தப் பல்கலைக்கழகத்தில் எவரும் கற்கவில்லை என்று எதிர்க் கட்சியினர் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முயற்சிக்கின்றனர். அந்தப் பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் தேடுதல் நடத்தியும், பல்கலைக்கழகத்திடம் மின்னஞ்சல் மூலம் கேள்வி அனுப்பிப் பதிலைப் பெற்றும் சபாநாயகரின் கல்வித் தகுதி பொய்யானது என்று அவர்கள் நிரூபிக்க முயற்சிக்கின்றனர். இதற்குப் பின்னரும் சபாநாயகரும் ஆளும் தரப்பினரும் இதுவிடயத்தில் அமைதியாக இருப்பது ஏற்புடையது அல்ல.

சபாநாயகர் தனது கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை வெளியிடவேண்டும் அல்லது நடந்த தவறுக்குப் பொறுப்பேற்று பதவி விலகவேண்டும். அதைவிடுத்து ஒட்டுமொத்த நாட்டையும் தேவையற்ற குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில் இந்தச் சர்ச்சை தொடர்வதற்கு இடமளிக்கப்படக்கூடாது. அதை ஒரு முடிவுக்குக் கொண்டவரவேண்டும்.

அத்தோடு நிறுத்தாமல் இனிவரும் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமையை உறுதிப்படுத்தி அந்த விவரங்களை நாடாளுமன்ற இணையத் தளத்தில் வெளியிடும் வகையிலான மாற்றங்களைக் கொண்டுவருவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உண்மையை கல்வித் தகமையை மக்கள் தெரிந்துகொள்ள வழிவகுப்பதும் கூட அவசியமான ஒன்று.

இலங்கையில் கல்வி அறிவி மிக உயர்வானதாக மதிக்கப்படும் நிலையில் அதில் ஏமாற்றி அரசியல் செய்யும் நிலயை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.



# இரண்டாம் பட்சம்

**என். சத்திய மூர்த்தி**

தும்பை விட்டு. வாலைப் பிடி என்று ஒரு வசனம் உண்டு. தற்போது, தமிழ் (தேசிய?) அரசியல் பரப்பில் அதுதான் அரங்கேறி வருகிறது. அல்லது, அரங்கேற முயற்சி செய்துவருகிறது. அதன் முடிவு எதுவாக இருக்கும் என்பது, எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல் காலத்தில்தான் விளங்கும்.

முதலில் ஜனாதிபதி தேர்தல், பின்னர் நாடாளுமன்ற தேர்தல் என்ற இரண்டு மைல்கல்களை எதிர்கொண்ட பின், தற்போது, தமிழ் அரசியல் கட்சியினர் சிலருக்காவது புத்தி வந்திருக்கிறது என்று கருத இடமிருக்கிறது. ஒருபுறம், சிறீதரனும் கஜேந்திரகுமாரும் சந்தித்துப் பேசியது, மறுபுறம், தமிழர் அரசியல் ஒற்றுமை குறித்து செல்வம் அடைக்கலநாதனும் பேசியது, அதனை தொடர்ந்து கஜேந்திரகுமார் அவரையும் சந்தித்தது.

ஒருவகையில் இவையெல்லாம் வரவேற்கப்பட வேண்டிய முன்னெடுப்புகள்தான். ஆனால், மீண்டும் மீண்டும் பழைய மொந்தையில் பழைய கள் என்ற கதையே தொடர்ந்தால், யாருக்கு லாபம்? யாரை நம்ப வைக்க, யாருடைய இழந்துவிட்ட ஆதரவை மீளப் பெற்றுக்கொள்ள இந்த முயற்சி?

சிறீதரனை பொறுத்தவரையில், மழைவிட்டும் தூறல் விடவில்லை என்ற நிலைமை. நாடாளுமன்ற தேர்தலில் அவரது உள்வீட்டு எதிரி சுமந்திரன் வெற்றிபெறவில்லை என்றாலும், கட்சி அமைப்பினுள் அவரது கையே இன்னமும் ஓங்கி இருக்கிறது. இந்தக் காலகட்டத்தில், அவர் சாட்சிகாரனை பார்க்க வேண்டுமா, அல்லது சண்டைகாரனை சமாதானபடுத்த வேண்டுமா? ஏன், சிறீதரன் தலைமை வகிக்கும் தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற குழுவில் அவருக்கு முற்றும் முழுமையாக ஆதரவு இருக்கிறதா? இந்த கேள்வியை அவர் முதலில் கேட்டுக் கொள்ளவேண்டும்.

செல்வத்தை பொறுத்தவரையில், தற்போதைய தமிழர் அரசியல் சிக்கல்களுக்கு அவர் முக்கிய பொறுப்பாளி. சம்மந்தன் சுகவீனமானதும், இப்போது மறந்தடிக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குத் தன்னைப் பிரதித் தலைவராகவும் தனது கைதடி சுரேன் குருசாமியை பிரதித் பேச்சாளராகவும் அறிவித்துக்கொண்டதிலும்தான், பிரச்சினையே ஆரம்பமாயிற்று.

அதனைத் தொடர்ந்து தனது பங்கிற்கு சுமந்திரனும் குயுக்தியான ஒரு விளையாட்டு விளையாட அவர்கள் அனைவரும் தமிழ் வாக்காளர்களால் நாறடிக்கப்பட்டுள்ளார்கள். இதுவே உண்மை. சுமந்திரன் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தார். செல்வம் அதைவிடக் கேவலமாக நாட்டிலேயே மிகவும் குறைவான விருப்பு வாக்குகளினால் மீண்டும் ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

என்றாலும், தற்போதைய முயற்சிகளை அவர்கள் அனைவரிலும் இளம் வயதினரான கஜேந்திரகுமாரால் செய்கிறார். அவரைவிட தமிழ் முன்னணி தலைவர்களில் இளைஞரானவர் என்றால், அது கிழக்கே மட்டகளப்பில் சாணக்கியனே. கஜேந்திரகுமாரைப் பொறுத்தவரை, தசாப்தங்களாக இழந்த தமிழ் அரசியல் பரப்பில் தனது குடும்பம் சார்ந்த தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர் ஊட்ட முயற்சிக்கிறார் என்றும் கருத இடம் இருக்கிறது.

### நிஜ உலகம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் வாக்குகளுக்கு விலையில்லாமல் போனது என்னவோ உண்மை. அது எதிர்பார்க்கப்பட்டதும்கூட. ஆனால், நாடாளுமன்ற தேர்தல் நிலைமை வேறு. அந்தத் தேர்தலில் நாட்டை ஆளும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்காவின் தேசிய மக்கள் சக்தி தமிழர்களின் கலாச்சார தலைநகரான யாழ்பாணத்திலேயே அதிகபட்ச வாக்குகளையும் அதன் காரணமாக அதிகபட்ச ஆசனங்களையும் பெறும் என்று இவர்கள் யாரும் கருதவில்லை.

இது போதாது என்று, ஒரு சுயாதீனக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் மருத்துவர் அருச்சுனாவை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினாலும் அனுப்புவோம், இன்னுமொரு பாரம்பரிய தமிழ் கட்சியின் வேட்பாளரை தேர்ந்தெடுக்கமாட்டோம் என்றும் ஒரு செய்தியை யாழ். வாக்காளர்கள் அனுப்பி உள்ளார்கள். அவரும் நாடாளுமன்றத்தின் தனது கன்னி உரையில், பாரம்பரிய கட்சிகளை விட அதிகமாகவே, அதீதமாகவே தமிழ் தேசியம் பேசி உள்ளார்.

அதிலும் குறிப்பாக, விடுதலை புலிகள் அமைப்பு, அதன் தலைவர் பிரபாகரன் ஆகியோரை அவர் சிலாக்கித்து பேசியது, சிறீதரனையே ஆட்டம்காண வைத்திருக்கும். இந்தப் பின்னணியில், பேசுபொருளாக மாறி வரும் புதிய தமிழ் கூட்டணியில், அருச்சுனா இணைத்துக் கொள்ளப்படுவாரா? அல்லது அவர்தான் இணைந்து கொள்வாரா?

எப்படி என்றாலும், பொது அரங்குகளில் அவரது பேச்சுக்களை மிதவாதமாக வழி நடத்தப் போவது யார்? அல்லது, ஏட்டிக்கு போட்டியாக மற்றவர்களும் தாங்கள் மறந்த கடந்தகால அரசியல் நிலைபாடுகளைத் குத்தித் தோண்டி, வெளியில் எடுக்கப் போகிறார்களா?

இந்தப் பின்னணியில், தற்போதைய அரசியல் நீக்கங்கள் உண்மையான மனமாற்றத்திற்கான அச்சாரமா? அல்லது, அடுத்த ஆண்டு உள்ளாட்சி மற்றும் மாகணசபை தேர்தல்களிலும், தேசிய மக்கள் சக்தி, குறிப்பாக வடமாகாணத்தில் பதித்த காலை அழுத்தி விடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயமா?

### நியாயமான கவலை

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து நோக்கும் போது, உள்ளாட்சி தேர்தலில் யாழ்பாண மாநகராட்சி சபை தேசிய மக்கள் சக்தி வசம் போய்விடுமோ, என்ற கவலை அனைத்துத் தமிழ் தரப்பினருக்கும் தோன்றி உள்ளது. இது நியாயமான கவலையே. ஆனால், அநியாயத்திற்கும் தனி நபர் அரசியல் செய்துவிட்டு, இப்போது துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று கூச்சலிட்டால், அதனால் என்ன பயன்? யாருக்குப் பயன்?

இப்போது ஒற்றுமை பேசும் இந்த பிரகஸ்பதிகள், உள்ளுராட்சி தேர்தலில்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# இரண்டாம் பட்சம்

யாழ்பாணம் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளிலும் வேட்பாளர் தேர்வில் ஒற்றுமையாக இருப்பார்களா? அல்லது, அவர்கள் சொல்லிக் கேட்கும் வகையிலா அவர்களது கட்சியின் பிற தலைவர்கள் கட்டுக்கோப்புடன் இருக்கிறார்கள்?

யாழ். மேயர் பதவி என்று வந்தாலே, தமிழ் அரசில் இருந்து ஆர்னோல்ட், கஜேந்திரகுமாரிடமிருந்து விக்னேஸ்வரன் கட்சிக்குத் தாவிய மணிவண்ணன், எல்லாப் பதவிகளிலும் ஆசை வைத்திருக்கும் செல்வத்தின் அடிப்பொடி சுரேன் என்று இப்போதே பல வேட்பாளர்கள் கண் முன்னே தோன்றி உள்ளார்கள். இது தவிரவும், சிறீதரன் போன்றோர், தங்களுக்கு ஆதரவான ஒரு சிலருக்காவது இப்போதே ஆசை காட்டி வைத்திருப்பார்கள்.

இது போதாது என்று, கடந்த முறை ரணில் அரசால் நிறுத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பை, நாடாளுமன்றம் மூலம் திரும்பி பெற்றுவிட்டு, புதிதாக வேட்பாளர்களை கோரும் முடிவை, அநுர தலைமை முன்னெடுக்க இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அவ்வாறானால், தமிழ் அரசியல் பரப்பில் அன்று தனித்துத்தேர்தல்கேட்டு,தனித்தனியாகவேட்பாளர்களை நிறுத்திய அணிகள், தற்போது இணைந்து செயல்பட முடியுமா என்ன?

இந்தப் பிரச்சினையை மனதில் வைத்தே செல்வம் அடைக்கலநாதனின் ரெலோ, அரசியல் ஒத்துழைப்பு அல்லது பேச்சு முன்னெடுக்கப்பட்டாலும், உள்ளாட்சி தேர்தல்களை தமிழ் கட்சிகள் தனியாகவே சந்திக்க வேண்டும் என்ற கருத்தையும் முன் வைத்துள்ளது. இது, வெளிதோற்றத்திற்கு நடைமுறைக்கு உகந்த திட்டமாகத் தோன்றலாம். ஆனால், அடிமட்டம் வரை தனித்தனி வேட்பாளர்கள் தேர்தல் கேட்டு, வெற்றி–தோல்வியில் முடிந்துவிட்டு, அவர்களை அடுத்து வரும் மாகாண சபை தேர்தலில் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமற்றது.

### தேனிலவு தொடருமா?

அந்த வகையில், உள்ளூராட்சித் தேர்தல்களைத் தொடர்ந்து மாகாண சபை தேர்தல்களையும் இந்த அரசு முன்னெடுக்கவேண்டும். தமிழ் அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி அநுர கோடிட்டு காட்டியது போல், அந்தத் தேர்தல் அடுத்த ஆண்டு கடைசியில் நடத்தப்படலாம். தேர்தலை அத்தனை காலம் நீடிக்க வேண்டாம் என்று அரசிற்கு சுமந்திரன் கோரிக்கை வைத்துள்ளார். அவருடைய நியாயமான கருத்துகளுக்கு அப்பால், தேசிய அளவில்கூட, வாக்காளர்களுடனான ஆளும் கட்சியின் தேனிலவு அதுவரை தொடருமா, என்ற கேள்வி எழுகிறது.

எது எப்படியோ, அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களை சந்திக்கவிருக்கும் தமிழ் கட்சிகள், தங்களது கீழ்மட்ட தொண்டர்களிடமும் களப்பணியாளர்களிடமும் ஒற்றுமையைத் தோற்றுவிக்க முடியுமா? இனப்போர் முடிந்த காலகட்டத்தில் தமிழ் வாக்காளர்களிடம் இருந்து உணர்வுபூர்வமான ஒருமித்த மனநிலையே, தமிழ் அரசுக் கட்சியில் 'வீடு' சின்னத்திற்கு அவர்களது ஆதரவைப் பெற்றுத் தந்தது. அதுவேகூட, அடிமட்டத்தில் கட்சிகளிடையே இருந்த உள்கட்சி பூசல்களை மழுங்க அடித்தது. தற்போதைய நிலைமையே வேறு.

இது போதாது என்று, மற்றொரு அரசியல் பிரச்சினையையும் தமிழ் அரசியல் தலைமைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இனப்போருக்கு முந்தைய காலகட்டத்தில், ஒருங்கிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் உலா வந்த தமிழ் அரசியல் தலைமைகள் மிக பெரிய தேர்தல் வெற்றிகளைக் குவித்திருந்தன. அன்று, அவர்களுக்கு எதிரான தென்னிலங்கை அரசியல் சக்திகள் இரண்டாகப் பிரிந்து, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி என்று தமிழர் பகுதிகளிலும் தேர்தலைச் சந்தித்து வந்தது. அவர்கள் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை என்றாலும், தனித்தனியாகத் தங்களுக்கென வாக்கு வங்கிகளைக்கொண்டிருந்தனர்.

மாறுபட்ட தற்போதைய சமூக–அரசியல்சூழலில்,தமிழர் பகுதிகளில், தென்னிலங்கை கட்சியாக ஆளும் தேசிய மக்கள் சக்தி மட்டுமே உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவர்கள் பெற்ற பெறுபேறுகள், இதனை உறுதி செய்கின்றன. இதுவரை உள்வீட்டு சண்டையில், முதல் இரண்டு மூன்று இடங்களைத் தக்கவைத்துக்கொண்ட தமிழர் தரப்பினர், ஒன்றிணையும்போது, அவர்களுக்கு மாற்றாக தேசிய மக்கள் சக்தி உருவெடுப்பதை தடுக்க முடியாது.

இல்லை என்று சொல்லாமல், தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்தால், அவர்கள் எதிர்வரும் தேர்தல்களில் சிறப்பாக வெற்றிபெறுவார்கள் என்ற கணக்கீடல்கள் உள்ளன. ஆனால், அந்த கணக்கிடல்களுக்கும் அப்பால், அவர்களிடையே உண்மையான, உணர்வுபூர்வமான ஒற்றுமை இல்லை என்ற எண்ணம் தமிழ் வாக்காளர்களிடையே தொடர இடமளித்தால், அதனால் பயன்பெறப்போவது, தேசிய மக்கள் சக்திதான். இதுதானே நாடாளுமன்றத் தேர்தலின் படிப்பினையும்கூட.

அந்தவகையில்தமிழர்அரசியல்இன்னமும்இடியாப்பச் சிக்கல்களில்தொடர்ந்துமாட்டிக்கொண்டுள்ளதுஎன்பதே உண்மை. அதனை மாற்றுகிறோம் என்று தற்போதைய தலைமைகளே பழைய பிலாக்கணம் பாடி களத்தில் தொடருமானால், அவர்களைத் தொடர்ந்தும் புறம்தள்ள தமிழ் வாக்காளர்கள் தயங்க மாட்டார்கள். இந்த வாக்காளர்களைப் பொறுத்தவரையில், தற்போதைய கால–ச்சூழலில் தென்னிலங்கை போலவே அவர்களும் 'மாற்றத்தை' விரும்புகிறார்கள். ஏமாற்றத்தை அல்ல. அவர்களை பொறுத்தவரையில், 'தமிழ் தேசியம்'கூட இப்போது இரண்டாம் பட்சம்தான்.






காலைக்கதிர் Kalaikkathir




# பல நாடுகளிலும் பக்தி மணம் பரப்பிய யோகர் சுவாமிகள்


'எல்லோரும் ஒரே குலம் எல்லோரும் ஒரே இனம்' என்ற பொன் வார்த்தையின் ஊடாக இந்துக்கள் ஒவ்வொருவரினதும் மன இல்லங்களிலும் குடிகொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவரே சிவ தொண்டனான யோகர் சுவாமிகள். யாழ்ப்பாணத்தில் உள்ள மாவிட்டபுரத்தில் 1872 ஆம் ஆண்டு வைகாசி 29 ஆன்று அம்பலவானர் மற்றும் சிவநாச்சியம்மையார் ஆகியோருக்கு மகனாக அவதரித்தவரே மாமுனிவர் சிவயோக சுவாமிகள். இவரது இளமைப்பெயர் 'சதாசிவம்' என்பதாகும். கடையிற் சுவாமிகளது சீடரான செல்லப்ப சுவாமிகளது முதன்மைச் சீடராக யோகர் சுவாமிகள் திகழ்ந்திருப்பது மேற்கோள்காட்டப்பட்டுள்ளது.

தனது இளமைப்பருவத்திலேயே கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலே தனது கல்வியைக் கற்றுச் சிறந்த மாணாக்கனாகத் திகழ்ந்தார் சதாசிவம். இவர் கீரிமலையில் இருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு நடந்து வந்து வேலனை தரிசித்து விட்டுச் செல்வது வழக்கம். 'நல்லூரிலும் சிவ தொண்டனிலும் போய்க் கும்பிடு' என்ற கூற்று அவருக்கு நல்லூரானின் மீது இருந்த அதீத அன்பையும் பக்தியையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது. இது இவ்வாறு இருக்க 1897ஆம்



ஆண்டில் சுவாமி விவேகானந்தரால் ஆற்றப்பட்ட ஆன்மீகச் சொற் பொழிவில் பங்கேற்று தனது ஆன்மீக ஆர்வத்தை மேன்மைப்படுத்தினார். இவ்வாறாக நல்லூரானைத் தரிசிக்க வந்தவேளையிலேயோகர் சுவாமிகளது விழிப்பார்வையானது தேரடி வீதியில் அமர்ந்திருந்த செல்லப்பா சுவாமிகள் மீது பட அவ்வனுபவத்தினை

'கருத்தில் நினைத்துருகி கைகூப்பந் தொண்டர்



வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல்
திருத்தலத்தில் தேரடியில் தேசிகனைக் கண்டு
தரிசித்தேன் ஆரடா நீ? என்றார்' என்று உருகிப் பாடுவதனூடாக நல்லூரான் மீது கொண்ட அவரது பக்தியும் செல்லப்பா சுவாமிகளது சிறப்பும் வெளிப்பட்டு நிற்கின்றன. அன்றிலிருந்து யோகர் சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளது சீடராக வாழ்ந்து அவருடைய போதனைகளைச் செவிசாய்க்கத் தொடங்கினார்.

யோகர் சுவாமிகள் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் காணப்பட்ட இலுப்பை மர நிழலிலே தியானம் செய்து வந்தார். காலஞ் செல்லச் செல்ல அவ்விடத்திலேயே மடமானது அமைக்கப்பட்ட பக்தர்களுக்கான போதனைகள் திருமுறைப் பாராயணம் என்பன இடம்பெற்று வந்தன. தினமும் திருநாவுக்கரசர் பெருமானது திருத்தாண்டகம் பாடப்பட்டது சிறப்பான தொன்றாகும். இவ்வாறு காணப்பட்ட யோகர் சுவாமிகளது போதனைகள்

'நீயும் மனிதன் நானும் மனிதன்
ஊன் கடமை போய்ச் செய்
இங்கு ஏன் வருகின்றாய் பிச்சைக்காரர்கள்
இங்கிருக்கின்றோம் எங்களைத் தொந்தரவு
சேய்யாதீர்' என்று திட்டி அதன் பின்னர் அவர்களை அரவணைத்துப் போதனைகளை வழங்குவார்.

மேலும் இப் பெருந்தகை மது ஒழிப்புப் பரப்புரைக்காக தொடர்பாக சிவதொண்டர் எனும் இதழை 1935 இல் நடராசரை ஆசிரியராகத் துணைக்கொண்டு வெளியிட்டார். இதன் சான்றாக 1953இல் சிவத்தொண்டர் நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இன்றுவரை பல்வேறு பிரதேசங்களில் இயங்கி வருவது யோகர்சுவாமிமீதானபக்தியினைவெளிப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறுபட்ட யோகர் சுவாமிகளது பெருமைகள் இலங்கையில் மட்டுமல்ல கனடா, இலண்டன், ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலும் பரவியிருக்கின்றது. அங்கெல்லாம் இவரது குருபூசைத்தினம் கொண்டாடப்படுகின்றது.

அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்த 22 வயதானஓர்இளைஞரைசுப்ரமணியசுவாமிகள் எனும் நாமத்தினூடாகச் சீடராக்கிக்கொண்டு அவரினூடாக யோகர் சுவாமிக்கான முதலாவது ஆச்சிரமமானது சென்பிராஸ்ஸிஸ்கோவில் அமைக்கப்பட்டது. இன்றும் சிவமுருகன் ஆலயமாக அது வணங்கப்பட்டு வருகிறது.

'குருமருந்து நல்லமருந்து' என்ற கூற்றிற்கிணங்கஇலங்கையின்கடைசிஆங்கிலேயஆளுநரான சோல்பரி பிரபுவின் மகன் சாந்த சுவாமிகள் எனப்படும் நாமத்தினூடாக யோகர் சுவாமிகளது சீடராக விளங்கியமை மதம் தாண்டிய சிறப்பினை உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறான நல்லூரானது அருட் சிறப்பால் பல பணிகளை ஆற்றிய சிவயோக சுவாமிகள் 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆகிலிய நட்சத்திரத்தில் இணைந்தார்.

எல்லோரிலும் சிவத்தைக் காண் என்பதற்கிணங்க நாமும் அவரது பாதத்தினைப் பற்றி வாழ்வோம்.



காலைக்கதிர் Kalaikkathir

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருமலையில் கவனவீர்ப்பு ஊர்வலம்







ஏஎச்ஆர்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பு நடத்திய மனித உரிமைகள் தின நிகழ்வு புதன்கிழமை திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

காலை 9 மணியளவில் சிவன் கோவிலடியில் இருந்து கவனவீர்ப்பு பேரணி ஆரம்பமாகியது.

இதன்போது வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறல், கூட்டுப் படுகொலைகளுக்கான நீதி, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம், அரசியல் கைதிகளின் விடுதலை, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்கல், மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கல், பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் பெண்களுக்கான தீர்வு, 76 வருட தேசிய இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வு போன்ற விடயங்களை உள்ளடக்கி பதாகைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் மக்கள் நடைபவனியாக சென்று குளக்கோட்டன் மண்டபத்தை சென்றடைந்தனர்.

இதன்போது மங்கள விளக்கேற்றலுடன் மனித உரிமை செயற்பாட்டில் ஈடுபட்டு உயிர் நீத்தமக்களுக்குஅஞ்சலிசெலுத்தப்பட்டதுடன் நிகழ்வு ஆரம்பமானது.

அதன் பின்னர், கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பு பிரதிநிதிகள் தாங்கள் எதிர்நோக்கிய உரிமை பிரச்சினைகளை குறிப்பிட்டதுடன் பிரதேச செயலாளர், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர், சட்டத்தரணிகள் ஏஎச்ஆர்சி நிறுவனத்தின் இணைப்பாளர் ஆகியோர் உரையாற்றியதுடன் இந்நிகழ்வின் இறுதியில் ஊடக சந்திப்பும் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் குறித்த விடயங்களை உள்ளடக்கிய மகஜர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இசைதீனிடம் கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பின் பிரதிநிதிகளால் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக கிழக்கு ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர், பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர், கிழக்கு மாகாண சிவில் வலையமைப்பின் தலைவர், ஏஎச்ஆர்சி நிறுவனத்தின் இணைப்பாளர், உட்பட பிரதேச சிவில் வலையமைப்பின் பிரதிநிதிகள் சமூக செயற்பாட்டாளர்கள் என மூவின மக்களும் கலந்து கொண்டனர்.

# சிறுமி துஷ்பிரயோக குற்றவாளிக்கு திருமலையில் 30 வருட கடூழிய சிறை

சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு 30 வருட சிறைத்தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 லட்சம் ரூபா நஷ்ஈடு வழங்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதான சிறுமி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபருக்கு எதிராக திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு விசாரணைகள் முடிவுற்று புதன்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டபோதே மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லா குற்றவாளிக்கு எதிராக 30 வருட சிறைத்தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 லட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு தீர்ப்பை வழங்கியிருந்தார். அத்துடன் குறித்த வழக்கில் பாதிக்கப்பட்டவரின் சார்பாக அரச சட்டத்தரணி நசிகேசன் முன்னிலையாகியிருந்தார்.

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியில் இருந்து மே மாதம் வரையான காலப்பகுதியில் குறித்த சிறுமி மூன்று முறை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தார் எனவும் விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் ஒருமுறைக்காக 10 வருடங்கள் சிறைத்தண்டனை என்ற அடிப்படையில்30வருடங்கள்சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நட்ட ஈடாக ஒரு குற்றத்திற்காக தலா ஒரு லட்சம் வீதம் மூன்று லட்சம் ரூபா வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற தீர்ப்புகள் சிறுமிகளுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் குற்றங்களை குறைப்பதற்கு உதவும் எனவும் இதுபோன்ற கடுமையான தண்டனையை திருகோணமலை நீதிமன்றில் மிக நீண்ட காலத்திற்கு பின்னர் புதிய அரசாங்கத்தின் காலத்தில் பார்க்கக்கூடியதாக இருப்பதாகவும், தண்டனைகள் அதிகரிக்கின்றபோதுதான் குற்றங்கள் குறையும் என்பதால் இதுபோன்ற தீர்புகளை வரவேற்பதாகவும் சமூக நலன் விரும்பிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# கார்த்திகைத் தீபம் ஏற்றியே நிற்போம் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**

நாளும் நல்லது கோளும் நல்லது
மாதமும் நல்லது வருடமும் நல்லது
மனதில் இறையைத் தினமும் நினைத்தால்
எல்லா நாளும் இன்பமாய் இருக்கும்

இதனைக் கருத்தில் இருத்திய முன்னோர்
இறையை நினைத்திட எல்லாம் செய்தனர்
மாதம் அனைத்தையும் மாண்புடை ஆக்கி
மனமதில் இறையைத் துதித்திட வைத்தனர்

தையினைத் தொடர்ந்து வருகின்ற மாதங்கள்
ஒவ்வொன்றும் முக்கியம் ஆக்கியே வைத்தனர்
பண்பாட்டை இணைத்தனர் பக்குவம் இணைத்தனர்
பாங்குடன் இறையை போற்றிட வைத்தனர்

கார்த்திகை என்றதும் ஒளியே தெரியும்
ஒளியினூடே உமை மைந்தன் தெரிவான்
கந்தக் கடவுளை எண்ணிடும் நிலையில்
கார்த்திகைத் தீபம் ஏற்றியே நிற்போம்

கனற் பொறியாக வந்தவன் கந்தன்
கார்த்திகைப் பெண்கள் கைகளில் தவழ்ந்தவன்
அருவாய் உருவாய் ஆனவன் கந்தன்
ஆனந்த தாண்டவ சிவானார் மைந்தன்

கார்த்திகை தீபம் தத்துவம் நிறைந்தது
கந்தனின் தோற்றம் நிகழ்ந்ததும் இத்தினம்
மாலவன் பிரம்மா மருளது அகன்று
மனமது மெய்மை உணர்ந்ததும் இத்தினம்

ஒளியின் பிளம்பாய் இருப்பது இறையே
இருளெனும் மாயையை ஒழிப்பது இறையே
என்னும் தத்துவம் எல்லோர் மனத்திலும்
இறுக்கமாய் பதியவே இத்தினம் அமைந்தது

வீடுகள் வீதிகள் விளக்குகள் ஒளிரும்
வெளிச்சமோ இருளினை விரட்டியே நிற்கும்
ஆலயம் அனைத்திலும் தீபங்கள் ஒளிரும்
அனைவரும் அகமும் இறையினைத் துதிக்கும்

வள்ளலார் இறைவனை ஒளியினில் கண்டார்
ஒளியை வணங்குதல் உயர்வென உரைத்தார்
இறையின் தரிசனம் ஒளியே ஆகும்
ஒளியாய் இருப்பது இறைவனே ஆகும்

தீபங்கள் என்பது தீமையை அகற்றும்
தீபங்கள் என்பது தீயதை எடுக்கா
தீபங்கள் முன்னே தெரிவது தூய்மை
தீபங்கள் உள்ளே இருப்பது இறையே

மழையும் பெய்யும் குளிரும் இருக்கும்
வெள்ளம் பெருகி வீதியில் ஓடும்
உள்ளம் எல்லாம் கந்தன் நினைப்பால்
உவப்பாய் யாவரும் தீபங்கள் ஏற்றுவார்

பக்தி சிரத்தையாய் பக்குவம் பேணி
கார்த்திகைத் தீபத்தை ஏற்றுவோம் வாரீர்
கார்த்திகை தீபத்தில் கந்தன் தெரிவான்
கந்தனை வணங்குவோம் கவலைகள் அகலும்



காலைக்கதிர் Kalaikkathir

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுகையில்,

உண்மையில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமல், கலாநிதி என்று தன்னைத்தானே கூறிக்கொண்டு சபாநாயகர் மக்களை ஏமாற்றியிருக்கின்றாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த அவமரியாதையை போக்கிக் கொள்வதற்கு இனியும் தாமதிக்காமல் உண்மையை வெளிப்படுத்துமாறு சபாநாயகரை வலியுறுத்துகிறோம். சபாநாயகருக்கு ஏற்படும் அவமானம் நாடாளுமன்றத்துக்கு ஏற்படும் அவமானமாகும்.

சபாநாயகர் பொய் கூறுகிறார் என்றால் உடனடியாக அவர் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகிறோம். அன்று கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக அநுர குமார திஸாநாயக்க கடும் கண்டனங்களை முன்வைத்தார். ஆனால் இன்று அவரது ஆட்சியில் அதே பிரச்சினை ஏற்பட்டுள்ளபோது அவரால் தீர்வினை வழங்க முடியாமலிருக்கிறது. அநுர இப்போது 'கோட்டா - பகுதி 2'ஆகிறாரா?

அரிசி ஆலை உரிமையாளர்களை அழைத்துஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்க பலசந்தர்ப்பங்களில்கலந்துரையாடியிருந்தார். ஆனால் இன்னும் அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. கோட்டாபய ராஜபக்சவின் அதே நாடகத்தை அல்லவா இவரும் அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றார்? மக்கள் மீண்டும் ஏமாற்றமடைந்துள்ளனர். தேர்தலுக்குமுன்னர்வழங்கியவாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம் - என்றார்.

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த சிறுமிகளின் தாய் மாத்தறை சென் தோமஸ் இளவரசர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாகவும், தந்தை வர்த்தகராகவும் உள்ளார்.

விபத்தில் உயிரிழந்த மூத்த பெண் தனது சுகயீனத்திற்காக நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் வைத்தியரைப் பார்த்துவிட்டு மாத்தறை வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில்இருந்துதெரியவந்துள்ளது.

## தெரிவுக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் அசோக ரங்வலவின் கலாநிதி பட்டம் மற்றும் மற்றுமொரு அமைச்சரின் பொறியியற் பட்டம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் இந்த தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிக்கு சபாநாயகரிடமிருந்தோ அல்லது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிடமிருந்தோ ஏற்றுக்கொள்ளக்கூடிய பதில் கிடைக்காததால், உரிய தெரிவுக்குழுவை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்படுகிறது என்றும் புதிய ஜனநாயக முன்னணி தெரிவிக்கிறது.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளருக்கு வித்தகர் விருது

*(றமீஸ்)*

*கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின்ஏற்பாட்டில் திருகோணமலையில்நடைபெற்றகிழக்கு மாகாண இலக்கிய விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளரும்,பிறை எப்.எம்.வானொலி சேவையின் பிரதானியுமான பசீர் அப்துல் கையூம் ஊடகத்துறைக்கான வித்தகர் விருதினைப் பெற்றுக் கொண்டார்.*

*இலங்கை வானொலி பிராந்திய சேவை நிலையமான பிறை எப்எம்.வானொலிஅறிவிப்பாளர்களால் நேற்று (வியாழக்கிழமை) அவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.*

*இதன்போது அறிவிப்பாளர்களான ஏ.சி.றாஹில், எம்.ஏ.நசீர், எம்.ஏ.றமீஸ், ஜே.சியாஹுல்ஹக்,எம்.எஸ்.சரீப்டீன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.*

*மருதமுனையினைச் சேர்ந்த பசீர் அப்துல் கையூம் ஊடகத்துறையில்*



*மிகுந்த ஆர்வம் கொண்டு செயற்பட்டு வருகின்றார். இவர் கடந்த 1987 ஆம் ஆண்டு பாடசாலை கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த காலப்பகுதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய 'இளைஞர் பரிசளிப்பு விழாவில்' தேசியரீதியிலான பேச்சுப் போட்டியில் முதல் இடம்பெற்று அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் கரங்களால் விஷேட ஜனாதிபதி விருதைப் பெற்றுக் கொண்டார்.*

*இதேவேளை இவர் பல்வேறு பாராட்டுதல்களையும்பரிசில்களையும் விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.*



காலைக்கதிர் Kalaikkathir

### சஜித் கட்சியின் தேசிய பட்டியல் விவகாரத்தில்

# ஆப்பு இழுத்த குரங்கின் நிலையில் உள்ளார் மு.கா. தலைவர் ஹக்கீம்

### உலமா கட்சித்தலைவர் முபாறக் முப்தி சாட்டை

(அஷ்ரப்கான்)

சமூகத்துக்கும் ரணில், மஹிந்த போன்றோருக்கும் துரோகம் செய்து பழக்கப்பட்ட ரவூப் ஹக்கீம் இப்போது சஜித் கட்சியின் தேசிய பட்டியல் இழுபறியில் ஆப்பு இழுத்த குரங்கு நிலையில் உள்ளார் என உலமா கட்சித்தலைவர் முபாறக் முப்தி தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது -

ஹக்கீம் ஒரு முட்டாள் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு வெல்ல முடியாது என தெரிந்த ஹக்கீம் சஜித் கட்சியில் மறைந்து கொண்டு கண்டியில் போட்டியிட்டார்.

தான் கண்டியில் கேட்டு வெல்ல வேண்டும் என்பதற்காக கட்சியை சஜித்திடம் அடகு வைத்துவிட்டு இப்போது தேசிய பட்டியலுக்காக ஒப்பந்தம் முறிந்து விட்டதாம் என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்.

இத்தனைக்கும் ஹக்கீம் பெற்ற முப்பதினாயிரம் வாக்குகளுக்காக சஜித் தரப்பிடம் தேசிய பட்டியல் கேட்பது நியாயம் அல்ல.




கடந்த 2020 தேர்தலிலும் சஜித் தேசிய பட்டியல் கொடுக்கவில்லை. விழுந்த குழியில் தொடர்ந்தும் தெரிந்து கொண்டே விழுவதும் ஏமாறுவதும் ரவூப் ஹக்கீமின் தொடர் முட்டாள்தனம்.

நாங்கள் தியாகம் செய்து வளர்த்த கட்சியை நாசமாக்கியவர் இந்த ஹக்கீமும் அவரோடிருந்த, இருக்கும் கொள்ளைக்கூட்டம்.


அது மட்டுமின்றி சஜித் பிரேமதாஸவுக்கும் அரசியல் அறிவு போதாது என்பதையும் இது காட்டுகிறது.

தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸ் முழுமையாக சஜித் கட்சியுடன் இணைந்து போட்டியிட வேண்டும் என்றும் அப்போதுதான் தேசிய பட்டியல் தருவேன், இல்லாவிட்டால் தனித்தே போட்டியிட்டு வாருங்கள் என சஜித்தும் ஹக்கீமிடமும் ரிசாத்திடமும் சொல்லியிருக்க வேண்டும்.

அவரும் சிறுபிள்ளை போன்று நடந்து கொண்டார். முஸ்லிம் என்பதை தன் பெயரில் கொண்ட முஸ்லிம் காங்கிரசினதும் ஹக்கீமினதும் தொடர்ச்சியான தவறுகளால் முஸ்லிம் சமூகம் அவமானப்பட்டு நிற்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

## 'மஹாகவி' நூல் வெளியீடும் நினைவுப் பகிர்வும் சிட்னியில்

சிட்னி மகாஜனன்களின் ஆதரவில் 'மஹாகவி' உருத்திரமூர்த்தி அவர்களின் நூல்கள் வெளியீடும் நினைவுப்பகிர்வுகளும் நடைபெற உள்ளன.




ஈழத்தின் பெருங்கவியான மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் நூல்கள் வெளியீடு இன்று (வெள்ளிக்கிழமை) மாலை ஆறு முப்பது மணிக்கு கில்ட்போர்ட் சமூக மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இலக்கம் 90, ஓநீல் தெரு, கில்ட்போர்ட், சிட்னிஎனும்முகவரியில் சிட்னி மகாஜனன்களின் ஆதரவில் 'மஹாகவி' உருத்திரமூர்த்தி அவர்களின் நூல்கள் வெளியீடும் நினைவுப் பகிர்வுகளும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் மஹாகவியின் கவிதைகள், கட்டுரைகள் மற்றும் நாடகங்கள் மற்றும் அரங்க நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

அத்துடன் மஹாகவி ஆக்கங்களிலிருந்து கவிதைகள், பாடல்கள் மற்றும் தனிநடிப்பு போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.







## கிழக்கு மாகாண இலக்கிய விருது விழா கலாசார நிகழ்வுகளுடன் கோலாகலம்

கிழக்கு மாகாண கலாசார மற்றும் பண்பாட்டாளர்கள் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய மாகாண அரச இலக்கிய விருது விழா புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இதில் கிழக்கு மாகாணத்தில் கடந்த 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட வாழ்நாள் சாதனையாளர்களுக்கான விருது, பல்துறை கலைஞர்களுக்கான வித்தகர் விருது, இளங்கலைஞர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாகாண மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த புத்தகம் மற்றும் சஞ்சிகைகளுக்கான விருதுகளும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களோடு நடைபெற்ற இந்த மாகாண இலக்கிய விருது வழங்கல் விழாவில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தின் கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாண செயலகத்தின் அரச உயர் அதிகாரிகள், மாகாண பணிப்பாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், இலக்கிய அதிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





மாகாணத்தின் முன்னேற்றத்திற்கும் தேசத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்து வரும் கலைஞர்களின் பணிகளை ஊக்குவித்து மாகாணரீதியான அங்கீகாரத்தை கலைஞர்களுக்கு வழங்குவதில் தாம் பெருமை அடைவதாக இங்கு உரையாற்றிய மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக கலைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விருதுகளும் பாராட்டு கௌரவிப்புகளும் பல்வேறு தடைகள் காரணமாக வழங்கப்படாமல் இருந்த போதிலும் தற்போது பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் நாம் இதனை நிறைவு செய்திருக்கிறோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். நவநீதன் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் இங்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான போக்குவரத்து இதர வசதிகள் அனைத்தும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை கலைஞர்கள் பலரும் பாராட்டி பேசினர். விருது பெற்ற அனைத்து கலைஞர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# பரிசளிப்பு விழா

(ஸாகிர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து நடத்திய பிரதேச கலை இலக்கிய விழா சாய்ந்தமருது பிரதேச பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிக்கா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கௌரவ அதிதியாக உதவி பிரதேச செயலாளர் என்.எப். அய்மா மற்றும் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றிம்ஸான் மற்றும் அதிதிகளாக நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஸான், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம். தௌபீக், பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளர் கே.எம்.ஏ.அஸீஸ், பொருளாளர் அஸ்வான் சக்காப் மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.







சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளின் உரை, கலை கலாசார நிகழ்வுகள், பிரதேச மட்ட நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட, அதி சிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவுகளில் சுமார் 70 பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவம் இதன்போது வழங்கப்பட்டது.

இவர்களில் சாய்ந்தமருதில் உள்ள இலக்கியத்தில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் மற்றும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல பிரிவினரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில்

(பாறுக் ஷிஹான்)

தமது அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தி தருமாறு கோரியும் இட நெருக்கடிக்கு தீர்வு காணுமாறும் வலியுறுத்தி அம்பாறை மாவட்டம் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்றிலில் நேற்று (வியாழக்கிழமை) இரவு 7.30 மணியளவில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 300 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மாணவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது தமது அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தி தருமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக ஒலுவில் வளாக பிரதான வீதிக்கு அருகில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் வளாகத்தினுள் ஊர்வலமாக தீப்பந்தம் ஏந்தி இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதில் போலித் தீர்வுகள் வேண்டாம், விடுதி வசதிகளை விரிவுபடுத்து ,தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகத்தினுள் உடனடியாக அழைக்கவும் , மாணவர்களை துன்புறுத்தாதே, மணவர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்து, போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





# கடலட்டை வளர்ப்புப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு யாழ். செயலகத்தில் சான்றிதழ்கள்

## எதிர்த்து கடற்றொழிலாளர் இணைய ஊடகப் பேச்சாளர் அன்னராசா காட்டம்

இலங்கை சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தில் கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்துவது வடமாகாண மீனவர்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு தெரிவித்திருந்தார்.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதுவடமாகாணகடற்றொழிலாளர்இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தில் கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்துவது வடமாகாண மீனவர்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலாளர் ம.பிரதீபனின் இந்த அறிவிப்பு தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள நான்கு மாவட்ட மீனவர் அமைப்புகள் ஒன்று கூடி கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்தக் கருத்துகளை முன்வைக்கின்றேன்.

வடக்கு மாகாண பாரம்பரிய மீனவர்களது வாழ்வாதாரத்தைஅழிக்கும்கடலட்டைபண்ணையை தடுத்து நிறுத்த கோரி யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாண ரீதியாகவும் பல்வேறு போராட்டங்களை செய்தும் அக்கோரிக்கை அடங்கிய மகஜர்களை வழங்கியும் உள்ளோம்.

வடக்குகடற்றொழில்சமூகத்தின்அக்கோரிக்கைக்கு செவிசாய்த்து பதிலளிக்காத நிலையில், இன்று கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வை நடத்துவது எந்தவித்தில் நியாயம்? இலங்கையில் கடலட்டை பண்ணை தொடர்பில் விஞ்ஞான ரீதியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சூழலுக்கு பாதிப்பு இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதைஎங்களைபிரதிநிதித்துவப் படுத்துகின்ற மாவட்ட அரசாங்க அதிபர் மபிரதீபன் தெளிவுபடுத்த வேண்டும்.




கடலட்டை பண்ணைக்கு எதிராக வடக்கு மாகாண கடற்றொழில் சமூகம் தொடர்ச்சியாக குரலெழுப்பி வருகிறது. இது தொடர்பில் விஞ்ஞான ஆய்வு ரீதியாக சூழல் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தி அனுமதிகளை வழங்குங்கள் என்று கோரி வருகின்ற நிலையில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் அதனை உறுதிப்படுத்தாது செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு இருக்கையில் சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தில் கடலட்டை வளர்ப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்த மாவட்ட செயலாளர் கூடிய கவனம் செலுத்துவதன் ஊடாக இதனை ஒரு சாதனையாக காட்ட முற்படுகின்றாரா என்ற சந்தேகத்தை கடற்றொழில்சமூகத்திற்குஏற்பட்டுள்ளது. பாரம்பரிய சிறு கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்திற்காக போராடிக்கொண்டிருக்கும் நிலையில் அதற்கு தீர்வைக் காண எவ்வித முய்றசியும் எடுக்காத மாவட்ட செயலாளர் எமது வாழ்வாதாரத்தை அழிக்கும்கடலட்டைவளர்ப்புபயிற்சிமேற்கொண்ட மாணவர்களை கௌரவிக்க முற்படுவது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு முன்னதாக, ஏற்கனவே அனுமதிவழங்கப்பட்டுள்ளகடலட்டைபண்ணைகளின் அமைவிடம் தொடர்பான உறுதிப்படுத்தல்களையும், கடலட்டை பண்ணை தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆய்வு முடிவுகளை வெளியிட்டு தெளிவுபடுத்த வேண்டும் என மாவட்ட செயலாளர் மபிரதீபனிடம் வடமாகாண கடற்றொழிலாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேநேரம் மாவட்ட செயலாளர் அவ்வாறு செயற்படாது நிகழ்வை நடத்துவாராயின் வடமாகாண கடற்றொழிலாளர் சமூகம் மீண்டும் ஒன்றுகூடி அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்போம். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2024இல் வெளியிடப்பெற்றது